# தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை
**TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL**

# அரையாண்டுத் தேர்வு

# 2014 -2015

# தமிழ்மொழி

## வளர் தமிழ் 5

சுட்டெண்:............................................................ நேரம்: 150 மணித்துளிகள்

1) **பொருத்தமான விடையைக் கீறிட்ட இடத்தில் எழுதுக.**

1. ஆடற்கலை பற்றி விரிவாகக் கூறும் நூல்

______________________ .

(புறநானூறு, சிலப்பதிகாரம், மூதுரை)

2. கல்லாலான சங்கிலிகள் காணப்படுவது

____________________________________ .

(மதுரை மீனாட்சி அம்மன் கோவிலில், தஞ்சைப் பெருங்கோவிலில், காமாட்சி அம்மன் கோவிலில்)

3. அற நூல்களிலே மிகச் சிறந்தது

______________________ .

(திருக்குறள், நாலடியார், மூதுரை)

4. நவில்தல் என்ற சொல்லின் பொருள்

______________________ .

(மகிழ்தல், சிரித்தல், கற்றல்)

5. ''தங்களுக்குப் பின் இளங்கோதான் பேரரசனாக வருவான்'' எனக் கூறியவன் ______________________ .

(சேரலாதன், செங்குட்டுவன், கணிகன்)

6. தனது 19 ஆவது அகவையில் விவிலிய நூலை மொழி பெயர்த்தவர்

__________________________________ .

(தனிநாயகம் அடிகளார், தாமோதரம் பிள்ளை, ஆறுமுகநாவலர் )

7. **பழமொழி :-**

துறவிக்கு வேந்தன் ________________ .

(கரும்பு, துரும்பு , அரும்பு)

8. மன்னன் கோப்பெருஞ்சிங்கனின் உயிர்த் தோழன்

____________________________ .

(பிசிராந்தையார் , மாமல்லன், புலிகேசி)

9. 90 என்ற எண்ணை எழுத்தில் எழுதினால்____________________ .

(தொன்னூறு, தொண்ணூறு, தொண்ணூரு )

10. மாமல்லபுரத்தைச் சிற்பக்காடாக்கிய மன்னன்

________________________________ .

(சேரன் செங்குட்டுவன் , அருண்மொழித்தேவன், நரசிம்மபல்லவன்)

11. உயிர்களுக்கு வேண்டிய உணவுப் பொருட்கள் விளைவதற்கு மூல கரணியம் ____________________ .

(விண்மீன் , கதிரவன், நிலா )

12. கோடைகாலத்தில் மரங்கள் __________________ க் காட்சியளிக்கும்.

( கருமையாக, வெண்மையாக , பசுமையாக)

13. **விடுகதை :-**

எண்ணெய் இன்றித் திரி இன்றி அணையாது எரியும் விளக்கு

____________________ .

(குத்துவிளக்கு, கதிரவன், மெழுகுதிரி)

14. பால் + சோறு என்பதைப் புணர்த்தினால் ____________________ .

(பாற்சோறு, பால்சோறு, பாற்ச்சோறு)

15. மல்லிகைப்பூ ____________________ என மணம் வீசியது .

(மளமள, கமகம, கடகட)

16. தமிழர் நிலங்களை ____________________ வகுத்தனர்.

(ஆறாக, மூன்றாக, நான்காக)

17. ____________________ வழியில் முதியவரைக் கண்டோம்.

(நீ, நாங்கள், நீங்கள்)

18. வாகை மரம் ____________________ நிலத்திற்குரிய மரமாகும்.

(முல்லை, குறிஞ்சி, மருதம்)

19. வயலை உழுவதற்கு உதவுவது ____________________ .

(குதிரை, ஆ, காளை)

20. பிறர் செய்யமுடியாத அருஞ்செயல்களைச் செய்து முடிப்பவர்

____________________ .

(சிறியோர், பெரியோர், வறியோர்)

21. ஆடற்குலப் பெண்கள் எனப்படுவோர் ____________________ .

(விறலியர், பாடினியர், ஆய்ச்சியர்)

22. பல்லவ மன்னர்களால் வரையப்பட்ட சிறந்த ஓவியங்கள் காணப்படும் இடம் ____________________ .

(மாமல்லபுரம், சித்தன்னவாசல், தஞ்சைப் பெருங்கோவில்)

23. ஒன்று திரண்டால் வலிமை பெறும் கொடி ________________ .

(மல்லிகை, அடம்பன் , முல்லை)

24. அரிசிமாவினால்__________________ இடுவர்.

(கோளம், கோழம், கோலம்)

25. நான் நாளை திருக்குறட் போட்டிக்குச் ______________ .

(செல்கின்றேன், செல்வேன், சென்றேன்)

26. முக்கனிகளில் ஒன்று ______________________ .

(மா, தோடை , மாதுளை)

27. இளங்கோவடிகளால் சிலப்பதிகாரம் __________________ .

(எழுதப்படுகின்றது, எழுதப்படும், எழுதப்பட்டது)

28. தஞ்சைப்பெருங்கோவிலின் கோபுரம்______________________ உயரமுடையது.

(நூற்றுப்பதினாறு, இருநூற்றுப்பதினாறு, இருநூற்றுப்பதினெட்டு)

29. நண்பனுக்குத் துன்பம் வந்தால் ______________________ உதவ வேண்டும்.

(விரைந்து , காலம் தாழ்த்தி , மெதுவாக)

30. வயலும் வயல் சார்ந்த இடமும் ______________________ .

( மருதம், நெய்தல், குறிஞ்சி)

| புள்ளிகள் 30 |
|---|

**2) அடைப்புக்குறிக்குள் உள்ள சொற்களைப் பொருத்தமாக மாற்றி எழுதுக.**

1. ______________________ ச் சென்ற இடமெல்லாம் சிறப்பு.

   ( கற்றோர் )

2. மன்னார் பல ______________________ க் கொண்ட பட்டினமாகும்.

   ( வளங்கள் )

3. குயிலி ______________________ அஞ்சலகம் சென்றாள்.

   ( அப்பா )

4. பயிர்களுக்கு வேண்டிய நீரும் ஒளியும் ______________________ கிடைக்கின்றது. (கதிரவன் )

5. நிலவன் காலையில் எழுந்து தனது ______________________ ப் படித்தான். ( பாடம் )

புள்ளிகள் 10

**3) பாடநூல் வினா ஏழினுள் ஐந்திற்கு விடை தருக.**

1. தைப்பொங்கல் அன்று சிறந்து நிற்கும் தமிழர் பண்பாடு எது?

2. "கலைகளிலே அவள் ஓவியம்" எனப்பாடிய கவிஞர் யார்?

3. மாந்தர் கடைப்பிடிக்க வேண்டிய ஒழுக்கங்களைச் சிறப்பாகக் கூறும் நூல் எது?

4. நெடுஞ்சேரலாதனுடைய பிள்ளைகளின் பெயர்களைத் தருக?

5. "மாடலன் எமது விருந்தினன் அவனைத் துன்புறுத்துவது எமது பண்பாடல்ல" எனக் கூறியவன் யார்?

6. குறிஞ்சி நில மக்களின் தொழில்கள் இரண்டினைத் தருக?

7. "ஆற்றங்கரையில் மரமும்".... எனத் தொடங்கும் நல்வழிப் பாடலில் சிறப்பித்துக் கூறப்பட்ட தொழில் எது?

புள்ளிகள் 10

**4) பாடல் வினாக்களுக்கு முழுவிடை தருக.**

*சிறுகச் சிறுகச் சேமித்தால்*
*சிறப்பாய் நாமும் வாழ்ந்திடலாம்*
*தேனீயும் எறும்பும் சேமிக்கும்*
*தெரிந்து போற்றிடு சேமிப்பை*

*சேமிப்பால் எம் வாழ்வுயரும்*
*சிறிதும் துன்பம் இன்றி வாழ்ந்திடலாம்*
*சிறுதுளி பெருவெள்ளம் ஆவதைப் போல்*
*சிறு பொருள் மலையாய்க் குவிந்துவிடும்*

*சேமிப்பென்னும் நற்பழக்கத்தை*
*சிறிய வயதில் தொடங்கிவிட்டால்*
*சிறிதும் வறுமை அணுகாதே*
*செல்வம் நிறையப் பெறுவோமே*

1. சிறுகச் சிறுகச் சேமித்தால் நாம் எவ்வாறு வாழ்ந்திடலாம்?

___________________________________________

2. இங்கு கூறப்படும் இரு உயிரிகளின் பெயர்களும் எவை?

___________________________________________

3. எதனால் வாழ்வு உயரும் என்று கூறப்படுகிறது?

___________________________________________

4. எவை மலையாகக் குவிந்துவிடும் எனக் கூறப்படுகிறது?

___________________________________________

5. சேமிப்பு என்னும் நற்பழக்கத்தால் எது சிறிதும் அணுகாது ?

___________________________________________

புள்ளிகள் 10

5) மிகப் பொருத்தமான சொல்லைக் கீறிட்ட இடங்களில் எழுதுக.

| ஓவியம் | வாழ்க்கையை | செவியையும் |
|---|---|---|
| கலைகளை | உழவர் | |

தமிழர் கலைகளை அறுபத்து நான்காக வகுத்துள்ளனர். அவர்கள் கலைகளைக் கவின் கலை என்றும் பயன்தரு கலை என்றும் வகுத்துக் கூறுவர். கண்ணையும் ________________ கவர்ந்து அவற்றினூடாக மனதிற்கு இன்பம் ஊட்டும் கலை கவின்கலை. இசை, நடனம், ________________, சிற்பம், நாடகம் போன்றவை கவின் கலைகளில் அடங்கும். மாந்தனிடம் இயல்பாக உள்ள அழகியல் உணர்ச்சியின் வெளிப்பாடே கவின் கலை. இக் கலை மாந்தனின் ________________ மகிழ்ச்சி உடையதாக்குகின்றது. மக்களின் வாழ்க்கைக்குத் தேவையான பொருட்களை ஆக்கப் பயன்படும் கலைகள் பயன்தரு கலைகள் எனப்படும். உணவுப் பொருட்களை உற்பத்தி செய்யும் ________________ ஆடைகளை நெய்யும் நெசவாளர், மட்பாண்டங்களைச் செய்யும் குயவர் அணிகலன்களைச் செய்யும் பொற்கொல்லர் போன்றவர்கள் பயன் தரு ________________ ப் பயின்று பணி செய்கின்றனர்.

புள்ளிகள் 10

**6) பந்தியை வாசித்து ; வினாக்களுக்கு முழுவிடை தருக.**

**முன்பு தமிழகம் முழுவதையும் ஆண்ட மன்னன் இராவணன். அவனது ஆட்சிக்காலத்தில் தமிழகத்தின் தலைநகராக இலங்கை நகர் இருந்தது. இராவணன் கற்றோர் போற்றும் கல்விமான். எவராலும் வெல்லமுடியாத பெருவீரன். இசையிலும் நாட்டியக் கலையிலும் நிகரற்ற கலைஞன். இவன் செங்கோல் ஆட்சி செய்த மன்னன். ஒரு குறையுமின்றிக் குடிகளைக் காத்த தமிழ் வேந்தன். இவனது கொடி வீணைக் கொடி. இதனால் இராவணனை வீணைக் கொடியோன் என்றும் அழைத்தனர். இவனது ஆட்சிக்காலத்தில் இலங்கை கல்வி கேள்விகளாலும் கலைகளாலும் சிறந்து விளங்கியது. மன்னனாய் இருந்தும் ஈசன் எனப் போற்றப்பட்டவன் இராவணன். ஈசன் என்றால் இறைவன் என்பது பொருள். இராவணனின் சிறப்புகள் பற்றி விரிவாகக் கூறும் நூல் இராவணகாவியம்.**

1. இராவணனின் ஆட்சிக்காலத்தில் தமிழகத்தின் தலைநகர் எது?

   ________________________________________

2. எவராலும் வெல்ல முடியாத பெருவீரன் யார்?

   ________________________________________

3. இராவணனது கொடி எது?

   ________________________________________

4. ஈசன் என்பதன் பொருள் என்ன?

   ________________________________________

5. இராவணனின் சிறப்புகள் பற்றிக் கூறும் நூல் எது?

   ________________________________________

புள்ளிகள் 10

7) **பந்தியை வாழிடமொழியில் மாற்றி எழுதுக.**

உலகில் பல மொழிகள் உள்ளன. அவற்றுள் தமிழும் ஒன்று. தமிழில் மிகச் சிறந்த நூல்கள் இருக்கின்றன. தமிழுக்கு இனிமை என்றும் பொருள் உண்டு. தமிழ் எங்கள் தாய் மொழி. நாம் தமிழைக் கற்போம். வீட்டில் தமிழைப் பேசுவோம்.

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

புள்ளிகள் 05

8) **தரப்பட்டுள்ள தலைப்புகளில் ஒன்றைத் தெரிவு செய்து 60 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.**

★ தமிழர் கலைத்திறன்கள் பற்றி நீர் படித்தவற்றைச் சுருக்கமாக எழுதுக.

★ நட்புப் பற்றித் திருக்குறளில் கூறப்பட்டுள்ளவற்றை எழுதுக.

★ தமிழ்ப்பள்ளி.

புள்ளிகள் 15